# சுவாசக் கிருமித்தொற்று (காய்ச்சல், இருமல், மற்ற சளிக்காய்ச்சல் அறிகுறிகள்) உள்ள நோயாளிகளுக்கான அறிவுரை



## மருத்துவ விடுப்பின் காலத்திற்கு வீட்டிலேயே இருங்கள்

சட்டப்படி, இந்த நோய்க்காக உங்களுக்குக் கொடுக்கப்பட்ட மருத்துவ விடுப்பின் முதல் 5 நாட்களுக்கு நீங்கள் வீட்டில் இருக்கவேண்டும். உங்களது மருத்துவ விடுப்பு 5 நாட்களுக்கு மேலாக நீட்டிக்கப்பட்டால், மருத்துவ விடுப்பின் காலகட்டம் முழுவதும் நீங்கள் தொடர்ந்து வீட்டிலேயே இருக்கவேண்டும்.

நீங்கள் மருத்துவரிடம் செல்லவேண்டிய அவசியம் இருந்தால் மட்டுமே நீங்கள் வீட்டைவிட்டு வெளியே செல்லலாம்.

இதனை மீறுவோருக்கு, தொற்றுநோய்கள் சட்டத்தின்கீழ், $10,000 வரையிலான அபராதம், ஆறு மாதம் வரையிலான சிறைத்தண்டனை அல்லது இரண்டுமே விதிக்கப்படலாம்.